**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

**கலை கலாசார பீடம்**

**மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு**

**2013/2014 (August 2018)**

**GY 3213 உயிரினப் புவியியல் (Bio Geography)**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்

பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

---

பகுதி I

1. அ) உயிரினப் புவியியல் என்றால் என்ன என்பதனை வரையறுக்குக.
(02 புள்ளிகள்)

ஆ) உயிரினப் புவியியல் கற்கை நெறியின் அவசியம் தொடர்பாக கருத்துரைக்குக.
(06 புள்ளிகள்)

இ) உயிரினப் புவியியல் பின்வரும் துறைகளோடு தொடர்புபடுமாற்றை உதாரணங்களுடன் விளக்குக.

I. காலநிலையியல்

II. பொருளாதாரம்

III. சூழலியல்

IV. மருத்துவம் (3x4 = 12 புள்ளிகள்)

2. அ) சூழல் என்பதனை வரையறை செய்து, அதிலுள்ள கூறுகள் தொடர்பாக விபரிக்குக.
(08 புள்ளிகள்)

ஆ) சூழல் தொகுதியின் நன்மைகள் மற்றும் அதன் சேவைகள் (Ecosystem benefits and services) என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.
(12 புள்ளிகள்)

3. அ) அயனமழைக்காட்டு உயிர்ச் சூழலின் பண்புகளை விளக்குவதுடன், அதன்மீது காணப்படும் அச்சுறுத்தல்கள் தொடர்பாக விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) அயன மழைக்காட்டு உயிர்ச்சூழலை பாதுகாக்க மேற்கொள்ளக்கூடிய முகாமைத்துவ நடவடிக்கைகளைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

## பகுதி II

4. புவியில் காணப்படும் உயிர்ப்புவி இரசாயன வட்டங்களைக் குறிப்பிட்டு, அதில் காபன் மற்றும் நீரியல் வட்டச் செயன்முறைகளில் மனித தலையீடுகளால் ஏற்படுத்தப்படும் பாதிப்புக்களை ஆராய்க.

(20 புள்ளிகள்)

5. உமது பிரதேசத்தில் காணப்படும் ஏதாவது ஒரு சூழல்தொகுதியைத் தெரிவு செய்து அச்சூழல்தொகுதியில் இடம்பெறும் இடைத்தாக்கங்கள், அவை எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் என்பவை தொடர்பாக ஆராய்க.

(20 புள்ளிகள்)

6. "மனித நடவடிக்கைகள் மற்றும் இயற்கைச் செயற்பாடுகள் காரணமாக உயிர்ப்பல்வகைமையானது பாரிய அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருகின்றது." இக்கருத்திற்கான ஆதாரங்களை உதாரங்களுடன் நியாயப்படுத்துக.

(20 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றுள் **இரண்டினிற்கு** விளக்கக்குறிப்புரை எழுதுக.

அ) மேய்ச்சல் உணவுச்சங்கிலியும் குப்பை உணவுச்சங்கிலியும்

ஆ) போசணை மட்டங்கள் (Tropics levels)

இ) சூழல்தொகுதி ஒன்றில் சக்திப்பாய்ச்சல்

(10x2=20 புள்ளிகள்)